**இந்திய உச்ச நீதிமன்றம்**

**2018-ம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதி**

**[மாண்புமிகு உச்சநீதிமன்ற தலைமை நீதியரசர் தீபக் மிஸ்ரா,**

**மாண்புமிகு நீதியரசர் ஏ.எம். கான்வில்கர்**

**மற்றும்**

**மாண்புமிகு நீதியரசர் டி.ஒய். சந்திரசூட்]**

**(சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்: 13817 of 2018)**

E. சிவக்குமார்

-எதிர்-

யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பலர்

புலனாய்வு: புலன் விசாரணையானது மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்யப்படுதல் - சுகாதார துறையில் பணியில் உள்ள மனுதாரர் சட்டத்திற்கு புறம்பான குட்கா மற்றும் பான்மசாலா தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்டு முதல் தகவலறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவராக காண்பிக்கப்பட்டுள்ளது - மேற்சொன்ன குற்ற செயலானது கண்காணிப்பு ஆணையர் தலைமையில், தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள, மாநில கண்காணிப்பு ஆணையத்தினால் புலனாய்வு செய்யப்பட்டு வந்தது - உயர்நீதிமன்றமானது வழக்கின் புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்து செயலுறுத்து பேராணை உத்தரவினை பிறப்பித்துள்ளது - நான்கு எண்ணிக்கையிலான காரணங்களுக்காக செயலுத்து நீதிபேராணை உத்தரவானது மனுதாரரால் சவாலுக்கு/எதிர்ப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது - முதலில், மத்திய புலனாய்வு செயலகத்திற்கு குற்றத்தினை புலனாய்விற்காக

மாற்றம் செய்திட கோரியிருந்த பரிகாரமானது சம அளவிலான அமர்வால் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது - இரண்டாவதாக, மனுதாரர் பெயரானது முதல் தகவலறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவராக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், விவாதத்திற்குரிய தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ள பொது நல மனுவினில் மனுதாரர் தரப்பினராக சேர்க்கப்பட்டிருக்கவோ அல்லது மனுதாரரை கேட்டறிய உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவோ கிடையாது மற்றும் மூன்றாவதாக, தமிழ்நாடு மாநில சட்டமன்ற உறுப்பினரால் அரசியல் உள்நோக்கத்திற்காக பொதுநல மனுவாக மேற்படி நீதிபேராணை மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது - **தீர்வு**: நீதிபேராணை மனுவினை தீர்மானித்திட உயர்நீதிமன்றத்தின் சம அளவுடைய அமர்வானது அப்போது செயலுடன் இருந்துள்ளது - குற்ற புலனாய்வானது விசாரணையில் இருந்து வருகிற காரணத்தினால் விசாரணை/புலனாய்வினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்வது அவசியமாக இருந்திருக்கவில்லை என நீதிமன்றமானது குறிப்பிட்டுள்ளது - அந்த விஷயங்களானது முறையாக விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது - சமஅளவுடைய அதே உயர்நீதிமன்றத்தின் அமர்வின் முன்தீர்ப்பு அல்லது தீர்வின் பிணைப்பினை மதித்திருக்கவில்லை என்பது இவ்வழக்கு கிடையாது - இரண்டாவதாக, பக்கசார்பற்ற மற்றும் நியாயமான குற்ற புலன்விசாரணையினை உறுதிசெய்திட வேண்டிய பிரச்சனையினை பொறுத்து, பெரும்பான்மையான பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் மனதில் நம்பிக்கையினை உட்புகுத்திட, அத்தகைய புலன் விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகம் வசம் ஒப்படைத்திட வேண்டியது அவசியம் என உயர்நீதிமன்றமானது கணித்துள்ளது - அவ்வாறு பார்க்கையில், புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு வசம் ஒப்படைத்திட வேண்டுமென உயர்நீதிமன்றமானது எடுத்திருந்த முடிவினில் எவ்விதமான

குறைபாடும் கிடையாது - இந்த வழக்கின் அசாதாரண சங்கதிகளின் கட்டாயத்தின் காரணமாக புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகம் வசம் ஒப்படைத்ததில், மனுதாரர் நீதி பேராணை மனுவில் தரப்பினராக சேர்க்கப்படவோ அல்லது மேற்படி விஷயத்தில் கேட்டறியப்படவோ இல்லை என்பதனை கோரிட உரிமை ஏதும் கிடையாது - அதன் காரணமாகவே விவாதத்திற்குரிய தீர்ப்புரையானது இல்லா நிலையது என குறிப்பிடுவதற்கு அடிப்படை ஏதும் இருக்க முடியாது - இறுதியான வாதத்தினை பொறுத்து, எதிர்கட்சியினர் சட்டசபைக்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்றும், அவர்கள் அதிகாரத்தில் உள்ள அரசினை கண்காணித்திடும் நபர்களாக செயல்படுகிறார்கள் - உண்மையாக மற்றும் பக்கசார்பற்று வெளிப்படுத்தினால், அவர்கள் பெரும்பான்மையான பொதுமக்களின் குறைகளை வெளிக்கொணர்ந்திடும் குரலாக இருப்பார்கள் - குற்றவியல் நீதி அமைப்பினில் நீதியினை வழங்கிடுவதில் ஏதேனும் பாரபட்சம் ஏற்படுவதற்கான உண்மையான மற்றும் நியாயமான அச்சமானது எழுந்திட வாய்ப்புகள் அமைந்திருந்தால் தவிர, அத்தகைய நபர்கள் தாக்கல் செய்யப்படும் மனுவானது அரசியல் பழி வாங்கும் நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒதுக்கி தள்ளிவிட முடியாது என விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் உயர்நீதிமன்றமானது குறிப்பிட்டுள்ளது - அதன் காரணமாக, பரிசீலனையில் உள்ள சவாலுக்கான/ எதிர்ப்புக்குள்ளான காரணமானது, எங்களது கருத்துப்படி தகுதியற்றதாக அமைந்துள்ளது.

புலன்விசாரணை - கேட்கும் உரிமை - முதல் தகவலறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவராக பெயரிடப்பட்ட ஒரு நபர், விசாரணையின் கட்டத்தில் கேட்கப்படவோ அல்லது நிச்சயமாக ஒரு விஷயமாக விசாரணைக்கான வாய்ப்பைப் பெறவோ உரிமை இல்லை, விசாரணையை

சிபிஐ/ மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றுவதற்கான உத்தரவு செல்லுபடியாகாது என்று கூறுவதைக் கேட்க முடியாது

சுப்ரதா சட்டோராஜ் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா மற்றும் பலர்(2014) **8 எஸ்.சி.சி. 768**; [2014] : **6 எஸ்.சி.ஆர் 783**; தரம் பால் எதிர் ஹரியானா மாநிலம் மற்றும் பலர் (2016) **4 எஸ்.சி.சி.160** : [2016] **1 எஸ்.சி.ஆர் 194** ; கே.அன்பழகன் எதிராக காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் பலர் . (2004) **3 எஸ்.சி.சி. 767**: [2003] 5 **சப்லி . எஸ்.சி.ஆர் 610 – ஆகிய முன்தீர்ப்புகளானது நம்பப்பட்டுள்ளன**.

D..வெங்கடசுப்ரமணியம் மற்றும் பலர் எதிர் எம்.கே. மோகன் கிருஷ்ணமாச்சாரி மற்றும் ஒருவர் (2009) 10 (2009) **10 எஸ்.சி.சி. 488**; [2009] **14 SCR 441** – ஆகிய முன்தீர்ப்புகளானது வேறுபடுத்தி காண்பிக்கப்பட்டுள்ளன. பஞ்சாப் மாநிலம் v. டேவிந்தர் பால் சிங் புல்லர் மற்றும் பலர்.(2011) **14 எஸ்.சி.சி 770**:[2011] **15 எஸ்.சி.ஆர் 540**; தினுபாய் போகபாய் சோலங்கி -எதிர்- குஜராத் மாநிலம் மற்றும் பலர். (2014) **4 எஸ்.சி.சி 626** : [2014] **3 எஸ்.சி.ஆர் 932**; நரேந்தர் G.கோயல் -எதிர் மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஒருவர் (2009) **6 எஸ்.சி.சி 65** : [2009] **8 எஸ்.சி.ஆர் 1004 – ஆகிய முன்தீர்ப்புகளானது மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.**

## மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள முன்தீர்ப்புகள்

| | | |
|---|---|---|
| [2011] 15 எஸ்.சி.ஆர் 540 | - | 3 வது பத்தியில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| [2014] 3 எஸ்.சி.ஆர் 932 | - | 8 வது பத்தியில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| [2009] 8 எஸ்.சி.ஆர் 1004 | - | 8 வது பத்தியில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| [2009] 14 எஸ்.சி.ஆர் 441 | - | 9 வது பத்தியில் வேறுபடுத்தி காண்பிக்கப்பட்டுள்ளது. |
| [2014] 6 எஸ்.சி.ஆர் 783 | - | 10 வதுபத்தியில் நம்பப்பட்டுள்ளது. |
| [2016] 1 எஸ்.சி.ஆர் 194 | - | 11 வதுபத்தியில் நம்பப்பட்டுள்ளது. |
| [2003] 5 சப்லி. எஸ்.சி.ஆர் 610 | - | 13 வதுபத்தியில் நம்பப்பட்டுள்ளது |

**உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு:**

சிறப்பு அனுமதி மனு (**உரிமையியல்**) **எண்: 13817 / 2018**

நீதிபேராணை மனு எண்: 19335 of 2017 என்பதில் சென்னை உயர்நீதிமன்றமானது கடந்த 26.04.2018 தேதியன்று பிறப்பித்திருந்த உத்தரவிலிருந்து எழுகிறது.

மேல்முறையீட்டாளர்களுக்காக மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹட்கி, செல்வி மிஷா ரோஹட்கி, எம். தங்கதுரை.

எதிர்மனுதாரர்களுக்காக மூத்த வழக்கறிஞர் பி. வில்சன் மற்றும் ஆர். நெடுமாறன். மத்திய புலனாய்வு செயலகத்திற்கு குற்றத்தினை புலனாய்விற்காக மாற்றம் செய்திட கோரியிருந்த பரிகாரமானது ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு சம அளவிலான அமர்வில் நீதிபேராணை மனு எண்: 1846 of 2017 என்பதில் கடந்த 27 ஜனவரி 2017 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் நீதிபேராணை மனு எண்: 12482 of 2017 என்பதில் கடந்த 28 ஜீலை 2017 தேதியிட்ட தீர்ப்புரை ஆகியவைகள் வாயிலாக நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய தீர்வுகளானது விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

**நீதியரசர் ஏ.எம். கான்வில்கர் என்பவரால் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது வழங்கப்பட்டுள்ளது.**

1. சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபேராணை மனு எண்: 19335 of 2017 என்பதில் கடந்த 26 ஏப்ரல் 2018 தேதியிட்ட உத்தரவு மற்றும் தீர்ப்புரைக்கு விதிவிலக்காக இந்த சிறப்பு அனுமதி மனுவானது எடுத்து கொள்கிறது. அதில் புகையிலை மற்றும்/அல்லது நிகோட்டின் உள்ளடக்கிய சட்டத்திற்கு விரோதமாக குட்கா மற்றும் பான்மசாலா தயாரிப்பு மற்றும் விற்பனை தொடர்பான குற்றவழக்கின் புலன்விசாரணையினை உயர்நீதிமன்றமானது செயலுறுத்து நீதிபேராணை உத்தரவு வாயிலாக மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்துள்ளது.

2. மனுதாரரின் பெயரானது புலனாய்வில் உள்ள குற்ற செயலில் பங்கேற்றுள்ளதாக குறிப்பிட்டு முதல் தகவலறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளவராக காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட

சமயத்தினில் மனுதாரர் சுகாதார அமைச்சகத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறையில் உள்ள உணவு பாதுகாப்பு அதிகாரியாக பணியமர்த்தப்பட்டுள்ளார். மேற்சொன்ன குற்ற செயலானது கண்காணிப்பு ஆணையர் தலைமையில், தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள, மாநில கண்காணிப்பு ஆணையத்தினால் புலனாய்வு செய்யப்பப்பட்டு வந்தது. விவாதத்திற்குரிய தீர்ப்பானது நான்கு எண்ணிக்கையிலான முக்கிய சவால்களை கொண்டுள்ளது, அவையாவன,

(i). முதலாவதாக, மத்திய புலனாய்வு செயலகத்திற்கு குற்றத்தினை புலனாய்விற்காக மாற்றம் செய்திட கோரியிருந்த பரிகாரமானது ஏற்கனவே பரிசீலிக்கப்பட்ட சமஅளவிலான/ ஒருங்கிணைந்த , அமர்வில் நீதிபேராணை மனுஎண்: 1846 of 2017 என்பதில் கடந்த 27 ஜனவரி 2017 தேதியிட்ட தீர்ப்புரை மற்றும் நீதிபேராணை மனு எண்: 12482 of 2017 என்பதில் கடந்த 28 ஜீலை 2017 தேதியிட்ட தீர்ப்புரை ஆகியவைகள் வாயிலாக நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்தகைய தீர்வுகளானது விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளன.

(ii). இரண்டாவதாக, மனுதாரர் பெயரானது முதல் தகவலறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவராக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், விவாதத்திற்குரிய தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ள பொது நல மனுவினில் மனுதாரர் தரப்பினராக சேர்க்கப்பட்டிருக்கவோ அல்லது மனுதாரரை கேட்டறிய உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டிருக்கவோ கிடையாது. அதன் விளைவாக, மேல்முறையீட்டில் உள்ள தீர்ப்புரையானது இல்லா நிலையது மற்றும் அதனடிப்படையில் ரத்து செய்யப்பட கூடியதாகும்.

(iii). மூன்றாவதாக, மத்திய புலனாய்வு செயலகத்திற்கு புலனாய்வினை மாற்றுவதற்கு சிறப்பு சூழ்நிலைகள் ஏதும் விவாதத்திற்குரிய தீர்ப்புரைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. கண்காணிப்பு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த புலன்விசாரணை குறித்த நிலை அறிக்கையின் செயல் திறனை பற்றியும் ஆராய்ந்திட கூட உயர்நீதிமன்றமானது கவலை ஏதும் கொண்டிருக்கவில்லை. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால், பிரச்சனைக்குரிய குற்றத்தினை புலனாய்வு செய்திட மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றிட உரிய காரணங்கள் ஏதும் அமைந்திருக்கவில்லை.

(iv). இறுதியாக, தமிழ்நாடு மாநில சட்டமன்ற உறுப்பினரால் அரசியல் உள்நோக்கத்திற்காக பொதுநல மனுவாக மேற்படி நீதிபேராணை மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருந்ததாக குறிப்பிட் டு வாதிடப்பட்டுள்ளது.

3. மேற்சொன்ன சவால்/ எதிர்ப்புக்குரிய காரணங்களுக்கு வலு சேர்த்திட பஞ்சாப் மாநிலம் எதிர் தவிந்தர் பால் சிங் புல்லர் மற்றும் பலர்- (2011) 14 எஸ் .சி.சி. 770 என்ற வழக்கினுடைய இந்நீதிமன்றத்தின் தீர்ப்பானது நம்புவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

4. இந்த அனுமதி மனுவினை அனுமதிப்பதனை 14 வது எதிர்மனுதாரர் (நீதி பேராணை மனுவின் மனுதாரர்) எதிர்த்துள்ளார். உயர் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட குற்றத்தினை நியாயமான முறையில் புலன் விசாரணை

நடைபெற வேண்டியது கட்டாயமானது என்பது குறித்து திருப்தி அடைந்துள்ளதையும், தமிழ்நாட்டின் எல்லையினை மீறி பல்வேறு மாநிலங்களுக்குள்ளும் குற்றத்தினை செயல்படுத்துவதில் சதி திட்டம் தீட்டப்பட்டுள்ளதனையும் நன்கு பரிசீலித்த பிறகே, புலன் விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றிட செயலுறுத்து நீதிபேராணை உத்தரவினை பிறப்பிப்பது பொருத்தமானது என உயர்நீதிமன்றமானது அனைத்து விஷயங்களின் அம்சங்களை ஆராய்ந்து கருதியுள்ளதாக குறிப்பிட்ட 14 வது எதிர்மனுதாரர் சார்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது. மனுதாரர்கள் சார்பாக எழுப்பப்பட்டுள்ள ஆட்சேபணைகளில் தகுதிகள் ஏதும் கண்டிருக்கவில்லை என வாதிடப்பட்டுள்ளது

5. மனுதாரர் சார்பாக ஆஜராகியிருந்த கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. முகுல் ரோஹட்கி மற்றும் எதிர்மனுதாரர் சார்பாக ஆஜராகியிருந்த கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் திரு. வில்சன் ஆகியோர்களை கேட்டறிந்தோம்.

6. விவாதத்திற்குரிய தீர்ப்புரையினை கவனமாக பரிசீலிக்கையில், உயர்நீதிமன்றமானது அனைத்து பிரச்சனைகளையும் முழுமையாக ஆராய்ந்து, பிரச்சனைக்குரிய குற்றத்தில் புலன்விசாரணையானது நியாயமாக நடைபெற வேண்டும் என்பதனை உறுதி செய்திட ஏற்பட்டுள்ள அவசியம் குறித்து முழுமையாக திருப்தி அடைந்த பிறகே புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்திட செயலுறுத்து நீதிபேராணை உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை 14 வது எதிர்மனுதாரருடன் சேர்ந்து நாங்களும் ஒப்பு கொள்கிறோம். மனுதாரர் எழுப்பிய முதலாவது விஷயத்தினை பொறுத்த வரையில், உயர்நீதிமன்றத்தின் சம அளவுடைய அமர்வானது நீதி பேராணை எண்: 1846

of 2017 மற்றும் நீதி பேராணை எண்: 12482 of 2017 ஆகியவைகளை தீர்மானித்த சந்தர்ப்பங்களில் உயர்நீதிமன்றமானது சங்கதிகளை பொறுத்து உயிருடன் இருந்துள்ளது என்பதனை விவாதத்திற்குரிய தீர்ப்புரையின் 107 முதல் 122 வரையிலான பத்திகள் வாயிலாக அறிந்திட முடியும். நீதி பேராணை எண்: 1846 of 2017 என்ற மனுவானது தொழில் ரீதியில் வழக்கறிஞரான P. வில்சன் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு உள்துறை முதன்மை செயலாளர் அவர்களுக்கு சென்னை மாநகர காவல் ஆணையர் அனுப்பியுள்ள 22.12.2016 தேதியிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஊழல் குற்றசாட்டு உரிய புலன் விசாரணை தொடங்கி உரிய குற்றவியல் விசாரணை மேற்கொண்டு மூத்த காவல் அதிகாரிகளின் உடந்தை குறித்த உண்மையினை வெளிக்கொணர மேற்படி பொதுநல மனுவானது தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், மேற்படி மனுவினில் போதிய ஆதாரம் மற்றும் காரணங்களை கொண்டிருக்காத காரணத்தினாலும், மனுதாரரின் நேர்மை தன்மையினை நீதிமன்றமானது சந்தேகம் கொண்டிருந்த காரணத்தினாலும் கடந்த 27.01.2017 தேதியிட்ட தீர்ப்பிரையின் வாயிலாக மனுவானது சுருக்கமான முறையில் நிராகரிக்கப்பட்டுள்ளது. தொழில்ரீதியில் வழக்கறிஞரான K. கதிரேசன் என்பவர் தாக்கல் செய்திருந்த நீதி பேராணை எண்: 12482 of 2017 என்ற பொதுநல மனுவினை பொறுத்தவரையில், கடந்த 30.06.2017 தேதியிட்ட உத்தரவினை ரத்து செய்து 5 வது எதிர்மனுதாரருக்கு சார்வு செய்திட நீட்டிப்பு கோரியும், மேலும் தமிழ்நாடு மாநிலத்தில் குட்கா மற்றும் பான்மசாலா போன்ற தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை விற்பனை செய்வது தொடர்பாக சென்னை மாநகர காவல் ஆணையர் அனுப்பியிருந்த கடிதத்தின் பார்வையில் முதல் தகவலறிக்கை பதிவு செய்திட உத்தரவு வேண்டியும், மற்றும் உயர்நீதிமன்றத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் வழக்கினை புலனாய்வு செய்திட சிறப்பு புலனாய்வு குழுவினை அமைத்திட வேண்டுமெனவும் குறிப்பிட்டு முதன்மையான பரிகாரங்கள்

கோரப்பட்டுள்ளன. அதாவது, குட்கா தயாரிப்பாளர்களின் பங்குதாரர்களிடமிருந்து வருமான வரித்துறையினரால் கைப்பற்றப்பட்டுள்ள குற்ற ஆவணங்களில் 5 வது எதிர்மனுதாரரின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், 5 வது எதிர்மனுதாரரை காவல் துறை தலைமை இயக்குநராக நியமனம் செய்வது குறித்த பிரச்சனை மேற்படி நீதிபேராணை மனுவில் முதன்மையானதாக இருந்தது. வழக்கினை பரிசீலிக்கையில் சம அளவுடைய அமர்வானது கடந்த 28.07.2017 தேதியிட்ட தீர்ப்புரையில், மத்திய புலனாய்வு செயலகமானது சிறப்பு புலனாய்வு குழுவினை அமைத்து புலன்விசாரணை மேற்கொள்ள உத்தரவு கோரிய நீதிபேராணை மனுவில், மனுதாரர் கோரிய பரிகாரமானது குறிப்பிடப்பட்டள்ளது. புலன்விசாரணை மத்திய புலனாய்வு செயலகத்திடம் ஒப்படைப்பது குறித்த பிரச்சனை குறித்து மேற்படி தீர்ப்புரையில் 25 A முதல் 25 D வரையிலான பத்திகளில் நீதிமன்றமானது சுட்டி காண்பித்துள்ளது. இருப்பினும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகத்தில் வழக்கு நாட்குறிப்பினை பரிசீலித்த பிறகு, குற்றம் தொடர்பான புலன்விசாரணை நடைபெற்று வருவதாக நீதிமன்றமானது அவதானித்திருந்தது/கருதியது. அதன் காரணமாக, மேற்படி தீர்ப்புரையின் 30 வது பத்தியில் கண்காணிப்பு ஆணையர் புலன்விசாரணையினை வலுப்படுத்திட வேண்டும் என மட்டும் குறிப்பிட்டு, உத்தரவானது பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த சூழ்நிலையில் விசாரணை/புலனாய்வினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்வது அவசியமாக இருந்திருக்கவில்லை என நீதிமன்றமானது குறிப்பிட்டுள்ளது. சரியான கோணத்தில் படித்திருந்தால், முந்தைய தீர்ப்புரைகளின் பரிசீலனைகளின் உந்துதலே அவைகள் ஆகும். விவாதத்திற்குரிய தீர்ப்புரையின் 107 வது பத்தி முதல், முன்தீர்ப்பு தடை கோட்பாடு மீதான சட்ட நிலைப்பாடு உட்பட, அத்தகைய அம்சங்களானது சரியான முறையில் எடுத்து கூறப்பட்டுள்ளது, மேலும் இறுதியாக விவாதத்திற்குரிய தீர்ப்புரையின் 141 முதல் 144

வரையிலான பத்திகளில் கீழ்கண்டவாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

"141. மேலே குறிப்பிடப்பட்டுள்ள K. கதிரேசன் என்பவர் தாக்கல் செய்திருந்த வழக்கில், நீதியரசர் K.K. சசிதரன் மற்றும் நீதியரசர் G.R. சுவாமிநாதன் ஆகியோர் அவதானித்தவாறு, ஊழலை கட்டுபடுத்திடவும், சட்டத்திற்கு புறம்பாக ஆதாயத்தினை பெற்றிடும் அரசு அலுவலர் மற்றும் பொதுத்துறை ஊழியர்களுக்கு எதிரான நடவடிக்கையினை தொடங்கிடவும், மற்றும் அதன் தொடர்புடைய விஷயங்களுக்காக கண்காணிப்பு ஆணையர் தலைமையில் செயல்படும் கண்காணிப்பு ஆணையத்திற்கு பரந்த விரிவான அதிகாரமானது உள்ளது. மாநில கண்காணிப்பு ஆணையமானது மாநில் அரசின் அதிகாரிக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்திருக்கக்கூடும். மாநில கண்காணிப்பு ஆணையமானது கடந்த 12.08.2016 தேதியன்று வருமான வரித்துறையின் முதன்மை இயக்குநர் (புலனாய்வு) அவர்களால் முதன்மை செயலாளர் வசம் ஒப்படைத்திருந்த குற்ற விவரங்கள் அடங்கிய கோப்பானது காணாமல் போயிருந்தமைக்கு உரிய பொறுப்பினை நிர்ணயித்திடவும், குற்றமானது பதிவு செய்யப்பட்டு சட்டத்தினில் கண்டுள்ளவாறு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதி செய்திடவும் விரிவான விசாரணையினை நடத்தியிருக்கக்கூடும். இருப்பினும், கண்காணிப்பு துறையில் மேற்கொள்ளப்படும் புலன்விசாரணையானது கண்காணிப்பு கோணத்திலிருந்தே அமைந்திருக்கிறது. ஊழலை கண்டறிவதே நோக்கமாகும். குட்கா மாபியா செயல்படும் முறை, மற்ற மாநிலத்திலிருந்து இறக்குமதி செய்யும் வகை மற்றும் முறை, குட்கா மற்றும் மெல்லும் தன்மையுடைய புகையிலை ஆகியவற்றின் விற்பனை மற்றும் விநியோகம், மற்றும் விநியோகத்திற்கான மூல

ஆதாரத்தினை கண்டறிதல் ஆகியவைகளுக்குள் நுழைந்து விசாரணை மேற்கொள்ளும் அளவிற்கு கண்காணிப்பு ஆணையத்தின் புலனாய்வு குறித்த அதிகாரமானது விரிவடைந்திருக்கவில்லை. கண்காணிப்பு துறையில் மேற்கொள்ளப்படும் விசாரணையானது உற்பத்தி அலகு மற்றும் ரகசிய சேமிப்பு கிடங்கு ஆகியவைகளை தோண்டி கண்டறிவதில்லை. மேலும் அத்தகைய புலன்விசாரணை வாயிலலாக புகையிலை குட்கா போன்ற நிகோட்டின் உள்ளடக்கிய தடை செய்யப்பட்டுள்ள பொறுத்து சட்டத்திற்கு புறம்பான இறக்குமதி, விநியோக மற்றும் விற்பனை அல்லது தயாரிப்பாளரை கைது செய்தல், விநியோகித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை அல்லது மற்ற வகையில் உள்ள தொடர்பு ஆகியவைகளை கண்டறிய இயலாது.

142. மத்திய புலனாய்வு செயலகம் போன்ற மையப்படுத்தப்பட்ட முகமையால் மேற்கொள்ளப்படும் புலன்விசாரணையானது மிகவும் விரிவானதாக அமைந்திருக்கும் மற்றும் தடை செய்யப்பட்ட மெல்லும் தன்மையுடைய புகையிலை பொருட்கள் தொடர்பாக சட்டத்திற்கு புறம்பான தயாரிப்பு, இறக்குமதி, விநியோகம், பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனைகளில் அனைத்து அம்சங்களோடு அத்தகைய புலன்விசாரணையானது அமைந்திருக்கும். மேலும், சட்டத்திற்கு புறம்பான இறக்குமதி, தயாரிப்பு, விநியோகம், பகிர்ந்தளித்தல் மற்றும் விற்பனை ஆகியவற்றில் தொடர்புடைய நபர்களை கண்டுபிடித்தல் மற்றும் இதுதொடர்பாக பொதுஊழியர் மற்றும்/அல்லது அரசு ஊழியர்களின் உடந்தை மற்றும் ஊழலை கண்டுபிடித்தல் ஆகியவைகளையும் உள்ளடக்கியதாக அத்தகைய புலன் விசாரணையானது இருக்கும். மேலே அவதானித்தவாறு, மத்திய

புலனாய்வு செயலகத்தால் செய்யப்படும் புலன்விசாரணை மற்றும் மாநில அரசு குழுவினால் செய்யப்படும் புலன்விசாரணை ஆகியவைகளுக்கும் இடையே விரோதம் ஏதும் கிடையாது. மத்திய புலனாய்வு செயலகம் மற்றும் கண்காணிப்பு துறை ஒன்றிணைந்து செயல்பட்டால் புலன்விசாரணையினை மிகவும் துரிதமாக மேற்கொள்ள முடியும்.

143. சட்டத்திற்கு புறம்பான குட்கா வணிகம் என்பது சமூகத்திற்கு எதிரான குற்றமாகும், இது கட்டுப்படுத்தப்பட வேண்டும். எனவே, தமிழ்நாடு மாநிலம் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் தடை செய்யப்பட்டுள்ள குட்கா மற்றும் இதர வகையிலான மெல்லும் தன்மையுடைய புகையிலை ஆகியவைகள் தொடர்பான சட்டத்திற்கு புறம்பான தயாரிப்பு, இறக்குமதி, விநியோகம், பகிர்தல் மற்றும் விற்பனை ஆகியவை தொடர்பான குற்றங்கள் அனைத்தினையும் பொருத்து புலன்விசாரணை செய்திடவும், மேலும் மேற்படி குற்றத்தினில் நேரடியாகவோ அல்லது மறைமுகவாகவோ உதவி குற்றத்திற்கு துணை புரியும் அல்லது குற்றத்தினை கட்டுபடுத்திடும் முயற்சியில் குறிக்கிடும் நபர்களாக பங்கு பெற்றுள்ளோரை கண்டறிந்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டிடவும், மத்திய புலனாய்வு செயலகத்திற்கு உத்தரவிடுவது பொருத்தமானதாக அமைந்திடும் என நாங்கள் கருதுகிறோம்.

144. எங்களுடைய பார்வையில் இந்த உத்தரவானது, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பொதுமக்களின் உடல் நலனிற்கு அபாயமாக அமைந்துள்ள மெல்லும் தன்மையுடைய புகையிலை மற்றும் குட்கா ஆகியவற்றின் ரகசிய விற்பனையின் அச்சுறுத்தலை தடுத்து,

குற்றவாளியை தண்டிப்பது கட்டாயம் என்பதற்காக மட்டுமல்லாமல், பக்கசார்பற்ற தன்மை மற்றும் நேர்மையுடன் கூடிய புலன்விசாரணை தொடர்பாக மக்களின் நம்பிக்கையினையும் ஊக்குவிப்பதாக அமைந்திருக்கிறது. புலன் விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகம் வசம் ஒப்படைப்பது மாநிலத்தின் புலனாய்வு அமைப்பின் செயல்திறனை அவமதிப்பதாக மாநில அரசு பார்த்திட எவ்விதமான காரணத்தினையும் நாங்கள் காணவில்லை, மேலும் மாநில அரசின் ஏதேனும் குறிப்பிட்ட அதிகாரிகளோ அல்லது ஏதேனும் அரசியலமைப்பு செயல்பாடுகளோ உடந்தையாக உள்ளதாக குறிப்பிட்டு இந்நீதிமன்றமானது திட்டவட்டமாக கண்டறிந்ததாக பொருள் கொள்ள கூடாது என்பதனை நாங்கள் முழுவதுமாக தெளிவுபடுத்துகிறோம்.

7. இவ்வழக்கின் சங்கதிகளில் உயர்நீதிமன்றமானது அவ்வாறு எடுத்திருந்த பார்வையானது சாத்தியமுடையதாக இருப்பதால், பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டுள்ள காரணங்கள் தகுதியற்றதாக அமைந்துள்ளது. சமஅளவுடைய அதே உயர்நீதிமன்றத்தின் அமர்வின் முன்தீர்ப்பு அல்லது தீர்வின் பிணைப்பினை மதித்திருக்கவில்லை என்பது இவ்வழக்கு கிடையாது என்பதனை அவதானிப்பது/கருதுவது போதுமானது ஆகும். சம அளவுடைய அமர்வின் தீர்ப்பானது விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் வேறுபடுத்தி காண்பிக்கப்பட்டுள்ளதால் நாங்கள் அவ்வாறு கூறுகிறோம். மேலும், தமிழ்நாட்டில் மட்டுமல்லாது அதனை தாண்டிய இதர மாநிலங்கள் மற்றும் அயல்நாடுகளில் அதிகாரம் மற்றும் செல்வாக்கினை பயன்படுத்தியுள்ள தொடர்புடையவர்களை பொறுத்து நியாயமான மற்றும் பக்கசார்பற்ற குற்ற புலனாய்வினை உறுதி செய்திட வேண்டிய அவசியம் தொடர்பான வினாவிற்கு தற்போது நேரடியாக பதிலளிக்கப்படுகிறது.

பெரும்பான்மையான பொதுமக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் மனதில் நம்பிக்கையினை உட்புகுத்திட, அத்தகைய புலன் விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகம் வசம் ஒப்படைத்திட வேண்டியது அவசியம் என உயர்நீதிமன்றமானது கணித்துள்ளது. அவ்வாறு பார்க்கையில், உயர்நீதிமன்றமானது விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் முடிவிற்கு வந்துள்ளதில் எவ்விதமான குறைபாடும் அமைந்திருக்கவில்லை.

8. மனுதாரர் வலியுறுத்தியுள்ள இரண்டாவது காரணத்தினை பொறுத்த வரையில் கூட, விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் முறையாக பரிசீலிக்கப்பட்டுள்ளது என்பதனை நாங்கள் கண்டறிகிறோம். வாதத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள தினுபாய் போகபாய் **சோலங்கி எதிர் குஜராத் மாநிலம் மற்றும் பலர்** (2014) 4 SCC 626 என்ற தீர்ப்புரையில் பக்க சார்பற்ற புலன் விசாரணைக்கு உத்தரவு கோரும் நீதிபேராணை மனுவில் எதிரியானவர் கேட்டறிய வாய்ப்பளித்திட வேண்டுமென உரிமை ஏதும் கிடையாது என தீர்மானிக்கப்பட்டுள்ளதனை, விவாதத்திற்குரிய தீர்ப்புரையின் 129 வது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ள **நரேந்தர் கோயல் எதிர் மகாராஷ்டிரா மாநிலம் மற்றும் ஒருவர்** (2009) 6 SCC 65 என்ற முன்தீர்ப்பின் 11 வது பத்தியில் புலனாய்வு நிலையில் எதிரியானவரை கேட்டறிய வேண்டும் என எவ்விதமான உரிமையும் எதிரிக்கு கிடையாது என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டநிலை என நீதிமன்றத்தால் அவதானிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவாறு இந்த வழக்கின் அசாதாரண சங்கதிகளின் கட்டாயத்தின் காரணமாக புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகம் வசம் ஒப்படைத்ததில், மனுதாரர் நீதி பேராணை மனுவில் தரப்பினராக சேர்க்கப்படவோ அல்லது அல்லது மேற்படி விஷயத்தில் கேட்டறியப்படவோ இல்லை என்கிற சங்கதியானது எங்களது கருத்தின்படி அத்தகைய உரிமை ஏதும் கிடைக்க கூடியது அல்ல. அதன்

காரணமாகவே விவாதத்திற்குரிய தீர்ப்புரையானது இல்லா நிலையது என குறிப்பிடுவதற்கு அடிப்படை ஏதும் இருக்க முடியாது.

9. டி.வெங்கடசுப்ரமணியம் மற்றும் பலர் எதிர் எம்.கே.மோகன் கிருஷ்ணமாச்சாரி மற்றும் ஒருவர் (2009) 10 SCC 488 என்ற வழக்கினில் தரப்பினருக்கு பின்னால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது இல்லா நிலையது மற்றும் அதன் காரணமாக மட்டுமே ரத்து செய்யப்பட வேண்டியது என குறிப்பிட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளதனை சுட்டிகாட்டி வெளிப்படுத்தியுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள பஞ்சாப் மாநில அரசின் என்கிற வழக்கின் 73 வது பத்தியில் அவதானிக்கப்பட்டுள்ளதன் மீது எங்களது கவனமானது அழைத்து செல்லப்பட்டுள்ளது. அவ்வாறு தரப்பினருக்கு பின்னால் பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவானது ஏதேனும் உரிமையியல் விளைவுகளை அந்த தரப்பினருக்கு ஏற்படுத்தியிருந்தால் வேண்டுமானால் அவ்வாறு இருக்கலாம், ஆனால் முதல் தகவலறிக்கையில் எதிரியாக காண்பிக்கப்பட்டுள்ளதனை தவிர்த்து, புலன்விசாரணை நிலையில் கேட்டறிய உரிமையில்லாத அல்லது கேட்டறிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும் என கோரிட உரிமையில்லாத நபரானவர், புலனாய்வானது மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு பிறப்பிக்கப்பட்டிருந்த உத்தரவானது இல்லா நிலையது என கூறுவதை கேட்க முடியாது. எங்களது கருத்துப்படி இந்த விரக்தியான வாதமானது நிராகரிக்க தகுந்தது ஆகும்.

10. சிறப்பு காரணங்கள் பதிவு செய்யப்படவோ அல்லது கண்காணிப்பு ஆணையத்தால் ஏற்கனவே செய்யப்பட்டிருந்த புலன்விசாரணை குறித்த நிலை அறிக்கை பரிசீலிக்கப்படவோ கிடையாது என மனுதாரர் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ள மூன்றாவது வாதமும் கூட எங்களை ஈர்த்திருக்கவில்லை. மேலே குறிப்பிட்டவாறு, உயர்நீதிமன்றமானது

வாதத்திற்குரிய தீர்ப்புரையில் 84 முதல் 87, 91 முதல் 97, 100 முதல் 107 மற்றும் 141 முதல் 144 ஆகிய பத்திகளில் தெளிவாக புரிந்து கொள்ளும் வகையில் மொத்த விஷயங்களையும் முறையாக பரிசீலித்து வெளிப்படுத்தியுள்ளது. புலன் விசாரணையானது மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்யப்படுதல் மாநில காவல் துறை மேற்கொண்டிருந்த விசாரணை/புலனாய்வின் குறைபாட்டினை சார்ந்து இல்லை என கணித்திருந்த **சுப்ரதா சட்டராஜ் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பலர்** (2014) 8 **எஸ்.சி.சி. 768** என்ற தீர்ப்பு உட்பட, விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் குறிப்பிடப்பட்டிருந்த தீர்ப்புகளில் வெளிப்படுத்திருந்த நிலை நிறுத்தப்பட்டுள்ள சட்ட நிலையின் நிலை தன்மையுடன் அணுகி அனைத்து தொடர்புடைய விஷயங்களையும் முறையாக பரிசீலித்து தற்போதைய வழக்கின் அசாதாரணமான சங்கதிகளில் உயர்நீதிமன்றமானது புலன்விசாரணையினை மத்திய புலனாய்வு செயலகத்திற்கு சரியான முறையில் மாற்றம் செய்துள்ளது என நாங்கள் கருதுகிறோம். தற்போதைய வழக்கின் சங்கதிகள் மற்றும் புலனாய்வில் உள்ள குற்றத்தின் தன்மை ஆகியவை அடிப்படையில் மத்திய புலனாய்வு செயலக புலன்விசாரணை அவசியம் என உயர்நீதிமன்ற முடிவுடன் நாங்களும் உடன்படுகிறோம்.

11. **தரம் பால் எதிர் ஹரியானா மாநிலம் மற்றும் பலர்** என்ற வழக்கில் இந்நீதிமன்றமானது பெரும்பாலான பொதுமக்கள் மற்றும் புலனாய்வு முகமை ஆகியவற்றில் நம்பிக்கைகளை உட்புகுத்திட பிடியாணை இன்றி கைது செய்யக்கூடிய குற்றங்களை புரிந்த எதிரிகளுக்கு எதிராக பக்கசார்பற்ற மற்றும் நியாயமான புலன்விசாரணையினை உறுதிபடுத்திட வேண்டியது கட்டாயமானது என்பதனை இந்நீதிமன்றமானது அடிகோடிட்டு காட்டியுள்ளது. இந்த முன்தீர்ப்பின் 24 வது மற்றும் 25 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள மிகவும் அறிவுறுத்தும் கருத்துரையானது கீழ்கண்டவாறு:

"24. இங்கே சொல்லப்பட்டுள்ளவாறு, அரசியலமைப்பு நீதிமன்றங்களானது மேல் விசாரணை மற்றும் வேறு ஏதேனும் புலனாய்வு முகமை புலனாய்வு மேற்கொண்டிட வேண்டுமென உத்தரவிட முடியும். நியாயமான புலனாய்வு மற்றும் நியாயமான விசாரணை நடைபெற வேண்டும் என்பதே அதனுடைய நோக்கமாகும். நியாயமான புலனாய்வு இல்லையெனில், நியாயமான விசாரணையினை நடத்திடுவது என்பது மிகுந்த சிரமமான ஒன்றாக அமைந்திட கூடும். மற்றொரு முகமையினால் மேல்விசாரணை நடத்திட வேண்டிய உத்தரவானது வெகு குறைவாக வழங்கப்படவேண்டும் என்பதில் நாங்கள் முழுமையான கவனத்துடன் உள்ளோம், ஆனால் இவ்வழக்கில் கண்டுள்ள சங்கதிகள் எங்களை அத்தகைய அதிகாரத்தினை செயல்படுத்திட எங்களை கட்டாயப்படுத்தியுள்ளது. பாதிக்கப்பட்ட நபரின் காரணங்கள் மற்றும் இறந்த நபரின் கணவர் ஆகியோருக்கு பதிலளித்திட வேண்டியது நீதியின் நோக்கமாக அமைந்துள்ள காரணத்தினால், நீதி பிறழ்வினை தடுக்க முடியும் என நாங்கள் நினைக்கிறோம். ஆகையால், வழக்கின் நிலையானது இவ்வழக்கில் தீர்மானிக்கும் காரணியாக அமைந்திட முடியாது.

25. நாங்கள் மேலும் தெளிவுபடுத்தலாம். புதிய, ஆரம்ப நிலை முதல் அல்லது மறு புலனாய்வினை உத்தரவிட வேண்டிய அதிகாரமானது அரசியலமைப்பு நீதிமன்றங்கள் வசம் மட்டுமே உள்ளது. வழக்கு விசாரணை தொடக்கம் மற்றும் சில சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளமை ஆகியவைகள், நியாயமான மற்றும் உரிய புலன்விசாரணையினை உறுதி செய்திட வேண்டி அத்தகைய

அரசியலமைப்பு அதிகாரத்தினை செயல்படுத்திட தடையாக இருக்க முடியாது. பெருங்கடலை சோதித்திட ஒரே சோதனையாக உப்பு சோதனை என்ற ஒன்று உள்ளது போல், மக்களின் துயரங்களுக்கு பாகுபாடு இல்லாமல் பதிலளிப்பது மட்டுமே நீதியின் சுவையாக உள்ளது என்பதனை எப்போதும் மறக்க முடியாது. ஏழை மனிதம் ஒருவன் சொல்லும் உண்மையானது ஆபூர்வமாய் மட்டுமே கவனிக்கப்படுவதாக ஒரு குடிமகன் உணர்ந்தால் குடியரசு அமைப்பானது அழிந்திட கூடிய சாத்தியம் உள்ளது என்பதனை நாங்கள் கூடுதலாக சேர்க்கலாம். சூரிய உதயம் மற்றும் சூரிய மறைவு, ஒளி மற்றும் இருள், இலையுதிர் காலம் மற்றும் வசந்த காலம் ஆகியவைகள் வரும், செல்லும், விளையாட்டான அத்தகைய காலக்கட்டங்களில் கூட நீதி நிலைநிறுத்தப்படும் போது உண்மையானது நிலைத்து நின்று மிளிரும் என கூறியது வாய்வார்த்தைக்காக கிடையாது. போலியான விசாரணை இல்லாத நியாயமான மற்றும் உண்மையான புலன்விசாரணை, ஏமாற்றுதல் மற்றும் வஞ்சகம் அற்ற உண்மை ஆகியவற்றினை உறுதிபடுத்திட வேண்டியது நீதிமன்றத்தின் தலையாய கடமையாகும். இது ஏற்க கூடியது அல்ல. உண்மையான மற்றும் பக்க சார்பற்ற புலன் விசாரணையானது கட்டாயம் என்பதனை ஆழ்மனதில் வைத்திருக்க வேண்டும். புலன்விசாரணையில் உள்தள்ளல் மற்றும் நிறைவு பெறாமல் குறையாக இருந்தால், புலன்விசாரணையில் உள்ள நம்பிக்கையினை உண்மையின் போதனையாக கருத இயலுமா? இது புனிதமுடைய அல்லது தூய்மையுடைய நேர்மையான புலன்விசாரணை என்ற நிலையினை அடைய இயலுமா? புலன்விசாரணையினை பொறுத்து வலுத்த சந்தேகமானது எழுந்தால், வழக்கின் விசாரணையானது தொடங்கிவிட்டதால் விஷயமானது

கையை மீறி போய்விட்டது என்ற கூற்றினை ஏற்றுகொண்டு, அரசியலமைப்பு நீதிமன்றமானது கையை கட்டிகொண்டு இருக்க வேண்டுமா? அதுவே வழக்கு தொடரும் திறனுக்குரிய சாதனையாகும். மேலும், நாமே இதனை மாற்ற இயலாத கல்வெட்டு போல என சொல்ல அனுமதித்தால் என்னவாகும். ஆனால், எங்களது பார்வையில் அரசியலமைப்பு நீதிமன்றங்களின் உச்ச அதிகாரத்தினை திணரடிக்கவோ அல்லது திறம்பட பேசியோ / விவாதித்தோ அடக்கிட முடியாது என்பதாகும். நிச்சயமாக ஒருவரின் கற்பனை உருவம் அல்லாது, ஒருவித அடிப்படை மற்றம் அடித்தளத்தினை அத்தகைய சந்தேகமானது கண்டிப்பாக கொண்டிருக்க வேண்டும். பக்க சார்பற்ற புலன்விசாரணையானது அனைத்தினையும் தீர்க்கும் மருந்து போல இருக்ககூடும் என ஒருவர் நினைக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல் இருப்பது நியாயமில்லாத ஒருவன் தன்னை நியாயவாதியாக நடித்து காட்டி கொள்வது போல அமைந்துவிடும். ஏற்கனவே குறிப்பிட்டவாறு, சங்கதிகள் சுய சாட்சியமாகும் மற்றும் கீழடுக்கினை சார்ந்த வருத்தம் கொண்டுள்ள தலைவன் ஒருவன் தன்னை சட்டத்தின் கீழான அனாதை என்கிற உணர்வினை கொண்டிட கூடாது".

12. வழக்கின் அசாதாரண சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் பிரச்சனைக்குரிய குற்றம் தொடர்பான புலன்விசாரணையானது மத்திய புலனாய்வு செயலகத்தின் வசம் கட்டாயம் ஒப்படைத்திட வேண்டியதே பொருத்தமானது என உயர்நீதிமன்றம் வந்துள்ள முடிவிலிருந்து விலகிட எவ்விதமான எண்ணமும் நாங்கள் கொண்டிருக்கவில்லை என்பதனை அவதானித்தலே போதுமானதாகும்.

13. இறுதி வாதமாக குறிப்பிடப்பட்டுள்ள, தமிழ்நாடு மாநில சட்டமன்ற உறுப்பினராக அல்லது சட்டசபையில் இந்த பிரச்சனையினை எழுப்பியதில் முக்கிய தீவிர பங்காற்றியிருந்தவரான 14 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த பொதுநல மனுவானது உயர்நீதிமன்றத்தினால் விரோத்தின் அடிப்படையிலேயே அனுமதித்து இருந்திருக்க வேண்டும் என்பதற்கும் மேற்படி விவாதத்திற்குரிய தீர்ப்புரையிலேயே பதிலளிக்கப்பட்டுள்ளது. 14 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்திருந்த பொதுநல மனுவினை அனுமதிக்கும் பொழுது, எதிர்கட்சியினர் சட்டசபைக்கு உள்ளேயும் மற்றும் வெளியேயும் முக்கிய பங்காற்றுகிறார்கள் என்றும், அவர்கள் அதிகாரத்தில் உள்ள அரசினை கண்காணித்திடும் நபர்களாக செயல்படுகிறார்கள் எனவும் அவதானித்திருந்த K. அன்பழகன் எதிர் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் பலர் (2004) 3 எஸ்.சி.சி 767 என்ற வழக்கின் கருத்துரையானது நம்பப்பட்டிருந்தது. உண்மையாக மற்றும் பக்கசார்பற்று வெளிப்படுத்தினால், அவர்கள் பெரும்பான்மையான பொதுமக்களின் குறைகளை வெளிக்கொணர்ந்திடும் குரலாக இருப்பார்கள். விவாதத்திற்குரிய தீர்ப்புரையின் 70 வது பத்தியில் இந்த தீர்ப்பினை நீதிமன்றமானது குறிப்பிட்டு, குற்றவியல் நீதி அமைப்பினில் நீதியினை வழங்கிடுவதில் ஏதேனும் பாரபட்சம் ஏற்படுவதற்கான உண்மையான மற்றும் நியாயமான அச்சமானது எழுந்திட வாய்ப்புகள் அமைந்திருந்தால் தவிர, அத்தகைய நபர்கள் (அதாவது 14 வது எதிர்மனுதாரர்) தாக்கல் செய்யப்படும் மனுவானது அரசியல் பழி வாங்கும் நோக்கத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒதுக்கி தள்ளிவிட முடியாது. அதன் காரணமாக, பரிசீலனையில் உள்ள சவாலுக்கான காரணமானது, எங்களது கருத்துப்படி தகுதியற்றதாக அமைந்துள்ளது.

14. இறுதியாக, பிரச்சனைக்குரிய குற்றத்தின் புலன் விசாரணையானது

மத்திய புலனாய்வு செயலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளமையானது மாநில கண்காணிப்பு ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்த புலன்விசாரணையின் செயல்திறனை பிரதிபலிக்கவில்லை என்பதனை தெளிவுபடுத்திட விவாதத்திற்குரிய தீர்ப்புரையில் 144 வது பத்தினில் உயர்நீதிமன்றமானது அவதானித்திருந்ததனை நாங்கள் மீண்டும் ஒருமுறை எடுத்துரைக்கிறோம். நாங்கள் அந்த நிலைபாட்டினை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

15. முடிவாக, இந்த சிறப்பு அனுமதி மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது.

மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்து கொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."